செய்தி வெளியீடு எண்: 855 நாள்:11.11.2020

# செய்தி வெளியீடு

## மது மற்றும் போதை பொருட்களை தவறாகப் பயன்பாடுத்துவதை கட்டுப்படுத்துதல் – தடுப்பு நல உத்திகள் பற்றி இணைய வழி கருத்தரங்கு

திரு. சி. பொன்னையன், மாண்புமிகு துணைத்தலைவர், மாநில வளர்ச்சி கொள்கைக்குழு (முன்னாள் மாநில திட்டக்குழு) அவர்களின் தலைமையில், இன்று 11.11.2020 ***மது மற்றும் போதை பொருட்களை தவறாகப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல் – தடுப்பு நல உத்திகள்*** என்ற தலைப்பில், துறைசார் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களின் பங்கேற்புடன் ஒரு இணையவழி கருத்தரங்கு நடைபெற்றது.

மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழுவின் உறுப்பினர் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கின் நோக்கத்தினை எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் பங்கெடுத்த அரசு மனநல காப்பகம் மற்றும் போதைதடுப்பு காவல் துறை அரசுத் துறை அலுவலர்களும், பொருள் சார் வல்லுநர்களும் விளக்கக்காட்சியுடன் கருத்துரை வழங்கினார்கள்.

போதைபழக்க அடிமைத்தனத்தால் ஏற்படும் சமூக மற்றும் நல்வாழ்வு சீர்கேடுகளை களைவதற்கான தீர்வுகைளை கண்டறிவதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

மது மற்றும் தடை செய்யப்பட்ட போதை தரக்கூடிய வேதிப்பொருட்களை ஆபத்து மற்றும் தீங்கிழைக்கும் வகையில் பயன்படுத்துதலே மருத்துவம்சார் வேதி பொருட்களை தவறாக பயன்படுத்துதலாகும். இத்தவறான பயன்பாட்டால் ஏற்படும் மருத்துவம் சார்ந்த, குறிப்பிடத்தக்க ஆரோக்கிய குறைபாடுகள் மற்றும் மனச்சிக்கல்களை தடுப்பதற்கு, உடல், உளம், சமூகம், பொருளாதார மற்றும் சட்ட ஒழுங்கு சார்ந்த தீர்வுகள் அவசியமாகிறது.

மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழுவின் (முன்னாள் மாநில திட்டக்குழு) துணைத்தலைவர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் தமது தலைமையுரையில், ஏற்கனவே ஊட்டச்சத்து குறைபாடு ஒரு சவாலாக இருக்கின்ற இத்தருணத்தில், போதைபொருட்கள் பயன்பாடு, குடும்பங்களை வறுமைக்கு தள்ளும் மற்றொரு சவாலாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார். தமிழக அரசு, போதை

பொருட்களின் தவறான பயன்பாட்டினை தடுக்க, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களோடும் இணைந்து செயல்பட்டு வருகின்றது. மேலும், போதைப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை அப்பழக்கத்திலிருந்து விடுவித்து இயல்பு நிலைக்கு திரும்ப ஏதுவாக, பல்வேறு மறுவாழ்வு திட்டங்களை செயல்படுத்தி, அவர்களையும் அவர்களது குடும்பத்தினரும் சமூகத்தில் இயல்பாக மரியாதையுடன் வாழ வழிவகை செய்கின்றது. போதை பழக்கத்தை தடுக்க போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, உரிய மனமகிழ் நிகழ்ச்சிகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பள்ளி / கல்லூரி பாடத்திட்டத்திலேயே விழுமக் கல்வி / அறநெறிக் கல்வி இதனுடன் போதை பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்ச்சி வழங்குவதும் இதற்கான ஒரு முக்கிய தடுப்பு நடவடிக்கையாக திகழும். மேலும், அவர் போதை மீட்பு நடவடிக்கைகளில், குறிப்பாக, வறிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்காக, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அதிக பங்களிப்பினை வலியுறுத்தினார். அதிக அளவில், நவீன மருத்துவ சிகிச்சை வசதிகளுடன் போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு மையங்கள் ஏற்படுத்த அரசுக்கு பரிந்துரைக்கப்படும் எனத் தெரிவித்தார். ஆரோக்கியமான நல வாழ்வை மீட்டெடுக்கக்கூடிய கருத்துருக்களுக்கு தேவையான நிதியினை அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முனைப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த கருத்தரங்கில் போதை பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க மேற்கொள்ள வேண்டிய மருத்துவ சிகிச்சை, மனநல ஆலோசனை மற்றும் ஆதரவு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கருத்தரங்கின் பரிந்துரைகள் உரிய நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு)**
**மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**